# வர்த்தக பொருளாதார, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப, கலாச்சார மற்றும் கல்வி ஒத்துழைப்பு குறித்து இந்திய ஜோர்ஜியா அரசுகளுக்கிடையிலான முதல் குழு கூட்டம்

**ஏப்ரல் 29,2014**

வர்த்தக பொருளாதார, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப, கலாச்சார மற்றும் கல்வி ஒத்துழைப்பு குறித்து இந்திய ஜோர்ஜியா அரசுகளுக்கிடையிலான முதல் குழு கூட்டம் டில்லியில் ஏப்ரல் 29,2014 அன்று நடந்தது.திரு.தினகர் குல்லார்,செயலாளர்(மேற்கு),வெளியுறவு துறை,இந்திய குழுவிற்கும்,உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அழைத்துவந்த மதிப்பிற்குரிய திரு.டேவிட் ஜலகணியா,துணை வெளியுறவு அமைச்சர், ஜோர்ஜியன் குழுவிர்க்கும் தலைமை வகித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், முதலீடு மற்றும், ஆற்றல், தொழில், தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தூதரக பிரச்சினைகள், பண்பாடு, கல்வி, சுகாதாரம் மற்றும் மருந்துகள், மற்றும் விவசாயம் ஒத்துழைப்பு குறித்து இந்த கலந்துரையாடல் கவனம் செலுத்தியது. ஜோர்ஜியாவில் விவசாயம், எரிசக்தி, உருக்கு மற்றும் எண்ணெய் ஆய்வு துறைகளில் இந்திய நிறுவனங்கள் சமீபத்தில் செய்த முதலீடுகள் பற்றி ஜோர்ஜியா பக்கம் குறிப்பிட்டது. இந்த அமர்வில் அடுத்த நிலை பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு குறித்து பல உறுதியான திட்டங்கள் எடுப்பது பற்றி விவாதிக்கப்பட்டது.இரு தரப்பும் குறிப்பாக மருந்து, தகவல்

தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் சுற்றுலா ஒத்துழைப்பு ஆகியவற்றில் உள்ள திறனை வரை விலக குறிப்பிட்டது.

அரசுகளுக்கிடையிலான குழு (ஐ ஜி சி) அமர்வை தொடர்ந்து ஃபிக்கி என்கின்ற உச்ச வணிக அமைப்பின் கீழ் ஒரு வணிக மன்றமும் நடந்தது. இதில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த விளக்கக்காட்சிகள் செய்யப்பட்டன. வர்த்தக மற்றும் கைத்தொழில் இந்திய சம்மேளனம் (ஃபிக்கி) மற்றும் ஜோர்ஜியா வர்த்தக சபைக்கிடையே வணிக மற்றும் தொழில்துறை நலன்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஒத்துழைப்பு மற்றும் நட்பு உறவுகளை நிறுவ, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைழெயுத்திடப்பட்டது.

**புது டில்லி,**

**ஏப்ரல் 29,2014**